# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்



| அத்தியாயம் | பொருளடக்கம் | விதிகள் | பக்கம் |
|---|---|---|---|
| I | வரையறை | விதி - 1 | 1 |
| II | பயிற்றுமொழி | விதி - 2 | 2 |
| III | சிறந்த மாணவர் | விதி - 3 | 2 |
| IV | பயிற்சிக்கான காலம் | விதி - 4 | 3 |
| V | பயன்கள் மற்றும் உரிமை கோரல்கள் | | |
| | எந்தஒரு கல்விக் கட்டணமும் இன்றி வகுப்பைத் தொடர்தல் | விதி - 5 | 3 |
| | கார்ல் மார்க்சு உதவித்தொகை | விதி - 6 | 4 |
| | பிரெட்ரிக் எங்கெல்சு உதவித்தொகை | விதி - 7 | 4 |
| | ஜென்னி உதவித்தொகை | விதி - 8 | 5 |
| | காமராசர் உதவித்தொகை | விதி - 9 | 5 |
| | அப்துல் கலாம் உதவித்தொகை | விதி - 10 | 5 |
| VI | செய்தி பகிர்வு மற்றும் தனியுரிமை | விதி - 11 | 6 |
| VII | மாணவர்களின் சந்தேகம் தீர்த்தல் | விதி - 12 | 6 |
| VIII | இணைய வகுப்பு | விதி - 13 | 7 |
| X | பதிவு செய்யப்பட்ட காணொளிகளின் செல்லுபடியாகும் காலம் | விதி - 14 | 7 |
| XI | ஒழுங்குமுறை நடவடிக்கைகள் | விதி - 15 | 8 |
| XII | விதிவிலக்குகள் | விதி - 16 - 18 | 9 |
| | தன்விருப்புரிமை அதிகாரம் | விதி - 19 | 9 |



CSIR-NET & GATE & JAM CHEMISTRY
UDYAM-TN-27-0019301
AJ CHEM ACADEMY

## அத்தியாயம் - I வரையறை

விதி - **1** அத்தியாயம்-I-ல் சிலபதங்களுக்கு(வார்த்தைகளுக்கு) விளக்கமும் வரையறையும் வழங்கப்பட்டுள்ளது. AJ Chem கல்விச்சாலையை பொறுத்தவரையில் எங்கெல்லாம் இந்த பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ, அவற்றை இங்கு வழங்கப்பட்டுள்ள அர்த்தத்தில் மட்டுமே பொருள்கொள்ள வேண்டும்.

விதி - **1.1** பதங்கள் - Terminology

விதி - **1.2** கட்செவி அஞ்சல் - WhatsApp

விதி - **1.3** வீட்டுப்பாடம் - Homework

விதி - **1.4** AJ Chem கல்விச்சாலை - AJ Chem Academy

விதி - **1.5** தொகுப்பு - Batch

விதி - **1.6** தேர்வு நுழைவுச்சீட்டு - Exam Admit card / Hall Ticket

விதி - **1.7** சேர்க்கை - Admission

விதி - **1.8** நேரலை வகுப்பு - Online Class

விதி - **1.9** நேரடி வகுப்பு - Offline Class

விதி - **1.10** இணைய வகுப்பு - Online Live Class

விதி - **1.11** பயணப்படி - Travel allowance

விதி - **1.12** பயனர் அடையாள எண் - User ID

விதி - **1.13** இணைய-வகுப்பறை - Online Classroom

விதி - **1.14** வகுப்பறை நுழைவு அடையாள எண் - Classroom ID

விதி - **1.15** Live Class **(Mandatory)** - இந்த Category-யில் விண்ணப்பிக்கும் மாணவர்களை பொறுத்தவரை நேரலையில்(Live Class) கலந்துகொள்வது மிகவும் கட்டாயம் ஆகும். *எனினும் இத்தகைய மாணவர்கள், மருத்துவ காரணங்கள் அல்லது கல்லூரியில் தேர்வு போன்ற அவசியமான காரணங்களுக்காக விடுப்பு எடுக்கும் உரிமைக்கு எந்தவித தடையும் இல்லை.*

விதி - **1.16** Live Class **(Not-Mandatory)** - இந்த Category-யில் விண்ணப்பிக்கும் மாணவர்களை பொறுத்தவரை நேரலையில்(Live Class) கலந்துகொள்வது

கட்டாயம் இல்லை. எனினும் இத்தகைய மாணவர்கள் தங்களுக்கு ஆக்கபூர்வமான ஆர்வம்/நேரம் உள்ளபொழுது நேரலையில் இணைந்துகொள்ள எந்தஒரு தடையும் இல்லை.

விதி - **1.17** SET தேர்வு - இந்தியாவில் எந்தஒரு மாநிலத்திலும் நடைபெறும் SET தேர்வையும் குறிக்கும்.

விதி - **1.18** CUET(PG) தேர்வில் தேர்ச்சி - இத்தேர்வானது தேசிய தேர்வு முகமையால்(NTA) நடத்தப்படுகிறது, எனினும் தேர்வு முடிவாக மதிப்பெண்கள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. ஆனால், அம்மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்களா? என்பதை அறிவிப்பதில்லை. எனவே, AJ Chem கல்விச்சாலையை பொறுத்தவரையில் பயன்கள்/உரிமை கோரலுக்காக இத்தேர்வில் 50% மதிப்பெண்கள் பெற்றிருந்தால், தேர்ச்சிபெற்றதாக எடுத்துக்கொள்ளப்படும்.

விதி - **1.19** அருகில் உள்ள தேர்வு மையம் - தேர்வுக்கான தேர்வு மையங்களில்(Exam centre) எந்த தேர்வு மையம் அருகில் உள்ளதோ அதை குறிக்கிறது.

## அத்தியாயம் - II பயிற்றுமொழி

விதி - **2** வகுப்பில் தமிழ் பேசும் மாணவர்கள் அதிக அளவில் சேர்வதால், பெரும்பாலும் தமிழ் கலந்த ஆங்கிலத்திலேயே வகுப்பு நடத்தப்படும். எனவே, தமிழ் மொழியை புரிந்து கொள்ளக்கூடிய மாணவர்களுக்கு மட்டுமே சேர்க்கை(Admission) வழங்கப்படும்.

## அத்தியாயம் - III சிறந்த மாணவர்

விதி - **3** AJ Chem கல்விச்சாலையை பொறுத்தவரையில், விதி எண் 3-ல் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்திருந்தால் மட்டுமே சிறந்த மாணவராக அங்கீகரிக்கப்படும். **அத்தகைய மாணவர்கள் மட்டுமே,** விதி எண் 5, 6, 7, 8, 9, 10 ஆகிய விதிகளின் கீழ் **பயன்களை/சலுகைகளை பெற இயலும்.**

விதி – **3.1** **80** சதவீதத்திற்கு மேல் வருகைப் பதிவு பெற்றிருக்க வேண்டும்.

விதி – **3.2** வகுப்பில் ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு ஆக்கபூர்வமான பதில்களை உடனுக்குடன் ஆர்வமாக கூறுவது, அன்றைய வகுப்பில் ஏற்பட்ட சந்தேகங்களை உடனுக்குடன் அன்றைய வகுப்பிலேயே கேட்பது, ஆகிவற்றில் ஒழுங்குமுறையை கடைபிடித்தல் வேண்டும். (Regularity in classroom interaction).

விதி – **3.3** **80** % நாட்களுக்கும் மேலாக குறைந்தபட்சம் **30** நிமிடங்களுடன் ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு வகுப்பு தேர்வு வீதம் எழுதியிருக்க வேண்டும். (Regularity in Class Tests).

விதி – **3.4** **80** % நாட்களுக்கும் மேலாக ஒவ்வொரு வகுப்பிலும் வழங்கப்பட்ட அனைத்து வீட்டுப்பாடங்களையும், அவ்வகுப்பு முடிந்ததிலிருந்து 10 மணிநேரத்திற்குள், ஆசிரியரால் வழங்கப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் பூர்த்திசெய்து அனுப்புவதில் ஒழுங்குமுறைகளை கடைபிடித்தல் வேண்டும். (Regularity in Home works).

விதி – **3.5** CSIR-NET/GATE/JAM/SET(Any State)/TRB/CUET(PG)/BARC/ISRO/ TIFR/ Geo-Scientist ஆகிய தேர்வுகளில் எந்தெந்த தேர்வுக்கு கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆசிரியர்களால் அறிவுறுத்தப்படுகிறதோ அத்தகைய தேர்வுகளில் துரிதமாக விண்ணப்பித்து தவறாமல் கலந்துகொள்ளவேண்டும்.

விதி – **3.6**

- மாணவர்கள் CSIR-NET/GATE/JAM/SET(Any State)/TRB/CUET(PG)/ BARC/ISRO/Geo-Scientist /TIFR ஆகிய தேர்வுக்கு விண்ணப்பித்தல்,
- அத்தகைய தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ளுதல், தேர்வு முடிந்தவுடன் தங்களது அனுபவங்களை ஒருங்கிணைப்பாளர்-ஆசிரியருடன்(Coordinator( பகிர்தல்,
- தேர்வு முடிவு வெளியானவுடன் தங்களது தேர்வு முடிவினை(Exam Result) ஆசிரியரிடமும் மற்றும் மேலாளரிடமும் தெரியப்படுத்துதல்,

ஆகியவற்றில் ஒழுங்குமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

விதி – **3.7**

- மாணவர்கள் ஏதேனும் காரணங்களுக்காக வகுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றாலோ,
- வகுப்பு தேர்வு எழுத முடியவில்லை என்றாலோ,
- வீட்டுப்பாடங்களை உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்க இயலவில்லை என்றாலோ,
- CSIR-NET/GATE/JAM/SET(Any State)/TRB/CUET(PG)/BARC/ISRO/Geo-Scientist /TIFR தேர்வுக்கு விண்ணப்பிக்க இயலவில்லை என்றாலோ,
- அத்தகைய தேர்வுகளுக்கு விண்ணப்பித்துவிட்டு தேர்வுக்கு செல்ல இயலவில்லை என்றாலோ, கூடிய விரைவில் மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

விதி – **3.8** மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவும் என்று ஆசிரியரால்/மேலாளரால் அறிவுறுத்தப்படும் இன்னபிற செயல்களிலும் ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும்.

## அத்தியாயம் - IV பயிற்சிக்கான காலம்

விதி - **4** வகுப்பில் சேரும் ஒவ்வொரு மாணவருக்கும் **6** மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

## அத்தியாயம் - V பயன்கள் மற்றும் உரிமை கோரல்கள்

விதி – **5** அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த

மாணவராக திகழும் மாணவர்கள், **6** மாதங்களுக்குள் (CSIR-NET/GATE/JAM) தேர்வில் தேர்ச்சி பெற முடியாத சூழலில், அடுத்த ஆறு மாதங்களுக்கு **எந்தஒரு கல்விக் கட்டணமும் இன்றி வகுப்பைத் தொடரலாம்.**

விதி - **6** **கார்ல் மார்க்சு உதவித்தொகை**

அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த மாணவராக திகழும் மாணவர்கள்,

- IIT-JAM தேர்வின் தரவரிசை பட்டியலில்(AIR) முதல் 500 இடங்களுக்குள் இடம்பெற்று பின்பு IIT-யில் முதுகலை படிப்பிற்காக(M.Sc.,) சேர்ந்தால், அங்கு பயிலும் ஒவ்வொரு பருவத்திற்கும்(Semester) ரூபாய் 15,000 வழங்கப்படும்.
- IIT-JAM தேர்வின் தரவரிசை பட்டியலில்(AIR) 501 முதல் 700 இடங்களுக்குள் இடம்பெற்று பின்பு IIT-யில் முதுகலை படிப்பிற்காக(M.Sc.,) சேர்ந்தால், அங்கு பயிலும் ஒவ்வொரு பருவத்திற்கும்(Semester) ரூபாய் 10,000 வழங்கப்படும்.
- IIT-JAM தேர்வின் தரவரிசை பட்டியலில்(AIR) 701 முதல் 850 இடங்களுக்குள் இடம்பெற்று பின்பு IIT-யில் முதுகலை படிப்பிற்காக(M.Sc.,) சேர்ந்தால், அங்கு பயிலும் ஒவ்வொரு பருவத்திற்கும்(Semester) ரூபாய் 7,000 வழங்கப்படும்.

UDYAM-TN-27-0019301
AJCHEM ACADEMY

விதி – **7** **பிரெட்ரிக் எங்கெல்சு உதவித்தொகை**

அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த மாணவராக திகழும் மாணவர்களுக்கு 6 மாதங்களுக்கு, மாதம் ரூபாய் 10,000/- வீதம் உதவித்தொகை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு (விதி **7.1** முதல் **7.4** வரை) வழங்கப்படும்.

விதி – **7.1** இங்கே பயிலும் காலங்களில், CSIR-NET(JRF) | SET | GATE | JAM | ஆகிய தேர்வுகளில் ஏதேனும் மூன்று தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

விதி – **7.2** PMRF (Or) SPM Scholarship, TRB அல்லது BARC-OCES/DGFS அல்லது வேறு ஏதேனும் வேதியியல் பாடம் தொடர்பான அரசு தேர்விற்கு(PSU) பயில விருப்பம் கொண்டிருக்க வேண்டும்.

விதி – **7.3** நேரடி வகுப்பில்(Offline) இணைய வேண்டும்.

விதி – **7.4** தொகுப்பில்(Batch) எந்தஒரு கல்விக் கட்டணமும் இன்றி வகுப்பை தொடரலாம்.

விதி - **8**

## ஜென்னி உதவித்தொகை

அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த மாணவராக திகழும் மாணவர்களுக்கு,

- *JAM / CUET-PG / SET* ஆகிய தேர்வுகளில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சிபெற்றால் ருபாய் 4000/- வழங்கப்படும்.
- *CSIR-NET(JRF) / GATE / TIFR* ஆகிய தேர்வுகளில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சிபெற்றால் ருபாய் 6000/- வழங்கப்படும்.

விதி – **9**

## காமராசர் உதவித்தொகை

அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த மாணவராக திகழும் மாணவர்களுக்கு CSIR-NET/GATE/JAM/SET/CUET/BARC/TIFR தேர்வுகளுக்கான விண்ணப்பக் கட்டணமும் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின்படி பயணப்படித்தொகையும் விதி **9.1** முதல் **9.5** வரையிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.

விதி – **9.1** **பயணப்படித்தொகை (Travelling Allowance):**

ரூபாய் 500/- (பயண தூரம் 101 முதல் 200 கிமீ வரை இருந்தால்)

ரூபாய் 750/- (பயண தூரம் 201 முதல் 300 கிமீ வரை இருந்தால்)

ரூபாய் 1000/- (பயண தூரம் 300 கிமீக்கு மேல் இருந்தால்)

விதி – **9.2** தேர்வுக்கான விண்ணப்பம் தொடங்கிய நாளிலிருந்து 10 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விதி – **9.3** இச்சலுகையைபெற தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனினும் தேர்ச்சி பெற்றிருந்தால் விதி எண்-8-ன் கீழான கூடுதல் சலுகையை பெறலாம்.

விதி – **9.4** பயணப்படியை பெறுவதற்கு மாணவர் தான் வசிக்கும்/தங்கியிருக்கும் பகுதிக்கு அருகில் உள்ள தேர்வுமையத்தை தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

விதி – **9.5** ஆக்கபூர்வமான காரணமின்றி தேர்வுக்கு விண்ணப்பித்துவிட்டு, தேர்வு எழுத செல்லவில்லை என்றால் இந்தச் சலுகையைப் பெற முடியாது.

## அப்துல் கலாம் உதவித்தொகை

விதி – **10** அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து சிறந்த மாணவராக திகழும் மாணவர்களுக்கு, ரூபாய் 5,000/- பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு (விதி **10.1** முதல் **10.2** வரை) வழங்கப்படும்.

விதி – **10.1** தங்கள் கல்லூரியில்/பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவராக விளங்கி, தனது வகுப்பறையின் தரவரிசை பட்டியலில், நடந்து முடிந்த பருவத்தேர்வு வரை, குறைந்தபட்சம் 75% மதிப்பெண்களுடன் முதல் இரண்டு இடங்களுக்குள்

இருக்க வேண்டும். (Top 2 Rank in Class with Minimum 75% Marks)

விதி – **10.2** இங்கே பயிலும் காலங்களில், M.Sc.,(வேதியியல்) மாணவர் CSIR-NET(JRF) | GATE ஆகிய தேர்வுகளில் ஏதேனும் ஒரு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

இங்கே பயிலும் காலங்களில், B.Sc.,(வேதியியல்) மாணவர் GATE | JAM | ஆகிய தேர்வுகளில் ஏதேனும் ஒரு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

விதி - **11** **அத்தியாயம் - VI செய்தி பகிர்வு மற்றும் தனியுரிமை (Chat and Privacy)**

விதி - **11.1** மாணவர்கள் வகுப்பின்போதோ அல்லது வகுப்பு முடிந்தபின்போ "Teachmint Tuition App"-ல் ஒருவருக்கொருவர் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

விதி - **11.2** வகுப்பில் சேரும் ஒவ்வொரு மாணவருக்கும் 6 மாதத்திற்கு ஒருமுறை ஒரு பயனர் அடையாள எண் (User ID) வழங்கப்படும்.

விதி - **11.3** பயனர் அடையாள எண் மட்டுமே வகுப்பறையிலும் தங்களது வார அறிக்கையிலும் (weekly Report) பயன்படுத்தப்படும்.

விதி - **11.4** தங்களது பயனர் எண்ணை தவிர தங்களது பெயர், வயது, பணி மற்றும் பாலினம் போன்ற எந்த தகவலும் இங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பகிரப்படாது. இதன்மூலம் ஆசிரியர்கள் மாணவர்களிடம் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ளும் வாய்ப்பு முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

விதி - **11.5** பயனர் அடையாள எண் வழங்கப்படுவதன் மூலம் தங்களது பெயர், வயது, பணி மற்றும் பாலினம் ஆகியவை மற்ற மாணவர்களால் எளிதாக அடையாளம் காண இயலாது.

**அத்தியாயம் - VII மாணவர்களின் சந்தேகம் தீர்த்தல் (Doubt clearing)**

விதி - **12** மாணவர்கள் ஆசிரியர்களிடம் வகுப்பு சம்பந்தமான எந்தஒரு சந்தேகத்தையும் எப்பொழுது வேண்டுமானாலும் கேட்கலாம். இணையவழி வகுப்பு நடைபெறும் பொழுது "Teachmint Tuition App"-ல் உள்ள "mic"-ஐ unmute செய்து மாணவர்கள் தங்களது ஆக்கபூர்வமான சந்தேகங்களை கேட்கலாம் அல்லது வகுப்பு முடிந்தவுடன் "Teachmint Tuition App"-ல் உள்ள chat box மூலம் நேரடியாக உரிய ஆசிரியரிடம் சந்தேகங்களை கேட்கலாம்.

விதி - **12.1** "Teachmint Tuition App/WhatsApp-ல் **குரல் செய்தி(Voice Message)** மூலம் சந்தேகங்களை கேட்க அனுமதியில்லை.

விதி - **12.2** மாணவர்கள் தங்களது சந்தேகங்களையோ அல்லது மற்ற ஏதேனும் உதவிகளையோ கைபேசி அழைப்பின்(Phone Call) மூலமோ அல்லது குரல் செய்தி(Voice Message) மூலமோ கேட்பதற்கு அனுமதியில்லை. **மேலாளரிடம் கட்செவி அஞ்சல்/மின்னஞ்சல்(email) ஆகியவற்றில் தட்டச்சு(Type) செய்து மட்டுமே கேட்கலாம்.**

விதி - **13** **அத்தியாயம் - VIII இணைய வகுப்பு (Online Class)**

விதி - **13.1** Teachmint Tuition App-ன் மூலமாக இணையவழி வகுப்பு நடத்தப்படும்.

விதி - **13.2** ஒவ்வொரு மாதத்திற்கும் ஒருமுறை ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு இணைய-வகுப்பறை (Online Classroom) வீதம் உருவாக்கப்படும்.

விதி - **13.3** தொகுப்பின் (Batch) முதல் மாதத்திற்கான வகுப்பறை நுழைவு அடையாள எண் மட்டும் கட்செவி அஞ்சல் மூலம் வழங்கப்படும்.

விதி - **13.4** அந்தந்த மாதத்திற்கான வகுப்பறை நுழைவு அடையாள எண் (classroom ID) பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அந்த மாதம் தொடங்குவதற்கு 2 நாட்களுக்கு முன்பு Teachmint Tuition App-ன் அறிவிப்பு பலகை (Notice Board) மூலமாக வழங்கப்படும்.

**அத்தியாயம் - X பதிவு செய்யப்பட்ட காணொளிகளின் செல்லுபடியாகும் காலம்.**

விதி - **14** ஒவ்வொரு முறையும் இணையவழி நேரலை வகுப்பு முடிந்ததும், "Teachmint Tuition App-ன்" Recordings பகுதியில், வகுப்பு முடிந்து அடுத்த 2 மணி நேரத்திற்குள் அன்றைய வகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும், இந்த பதிவேற்றம் செய்யப்பட்ட காணொளிகளை மாணவர்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் பார்வையிடலாம். ஆனால், இந்தச் சிறப்புரிமை அதன் காலாவதி (விதி - **14.1**) காலம் முடியும் வரை மட்டுமே.

விதி - **14.1** **Batch - I : சனவரி - சூன்**

| மாதம் | நேரலை வகுப்பு (கட்டாயமானது) | நேரலை வகுப்பு (Not-Mandatory) |
|---|---|---|
| சனவரி மாதத்தின் காணொளிகள் | பிப்ரவரி - 2 வரை | பிப்ரவரி - 28 வரை |
| பிப்ரவரி மாதத்தின் காணொளிகள் | மார்ச் - 2 வரை | மார்ச் - 30 வரை |
| மார்ச் மாதத்தின் காணொளிகள் | ஏப்ரல் - 2 வரை | ஏப்ரல் - 30 வரை |
| ஏப்ரல் மாதத்தின் காணொளிகள் | மே - 2 வரை | மே - 30 வரை |
| மே மாதத்தின் காணொளிகள் | சூன் - 2 வரை | சூன் - 30 வரை |
| சூன் மாதத்தின் காணொளிகள் | சூன் - 30 வரை | சூன் - 30 வரை |

**Batch - II : சூலை - திசம்பர்**

| மாதம் | நேரலை வகுப்பு (கட்டாயமானது) | நேரலை வகுப்பு (Not-Mandatory) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| சூலை மாதத்தின் காணொளிகள் | ஆகஸ்ட் - 2 வரை | ஆகஸ்ட் - 30 வரை |
| ஆகஸ்ட் மாதத்தின் காணொளிகள் | செப்டம்பர் - 2 வரை | செப்டம்பர் - 30 வரை |
| செப்டம்பர் மாதத்தின் காணொளிகள் | அக்டோபர் - 2 வரை | அக்டோபர் - 30 வரை |
| அக்டோபர் மாதத்தின் காணொளிகள் | நவம்பர் - 2 வரை | நவம்பர் - 30 வரை |
| நவம்பர் மாதத்தின் காணொளிகள் | திசம்பர் - 2 வரை | திசம்பர் - 30 வரை |
| திசம்பர் மாதத்தின் காணொளிகள் | திசம்பர் - 30 வரை | திசம்பர் - 30 வரை |

## அத்தியாயம்-XI ஒழுங்குமுறை நடவடிக்கைகள்

விதி - **15** பின்வரும் காரணத்தின் (விதி-**17.1** முதல் விதி-**17.8** வரை) கீழ் வரும் மாணவர்கள் அடுத்த பத்து நாட்களுக்குள் தற்காலிகமாக வகுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விதி - **15.1** முறையான அறிவிப்பின்றி தொடர்ந்து **3** நாட்களுக்கு மேல் விடுப்பு எடுக்கும் மாணவர்கள்,

விதி - **15.2** முறையான அறிவிப்பின்றி தொடர்ந்து **3** நாட்களுக்கு மேல் வகுப்பு தேர்வு எழுதாத மாணவர்கள்,

விதி - **15.3** முறையான அறிவிப்பின்றி தொடர்ந்து **3** நாட்களுக்கு மேல் வகுப்பு ஒதுக்கீட்டை (Assignment)/வீட்டுப் பாடங்களை சமர்ப்பிக்காதவர்கள்,

விதி - **15.4** ஆக்கபூர்வமான காரணமின்றி மாத இறுதியில் **50%**க்கும் குறைவான வருகைப்பதிவு கொண்ட மாணவர்கள்,

விதி - **15.5** ஆக்கபூர்வமான காரணமின்றி மாத இறுதியில் **15** வகுப்பு தேர்வுக்கும் குறைவாக எழுதியிருப்பவர்,

விதி - **15.6** ஆக்கபூர்வமான காரணமின்றி மாத இறுதியில் **15** நாட்களுக்கும் குறைவான நாட்கள் வீட்டுப்பாடங்களை சமர்பித்திருக்கும் மாணவர்கள்,

விதி - **15.7** வகுப்பு நேரத்தில் கவனக்குறைவாக/ஒழுக்கக்குறைவாக நடந்துகொள்பவர்கள்,

விதி - **15.8** CSIR-NET/GATE/JAM/SET(Any State)/TRB/CUET(PG)/BARC/ISRO/ TIFR/ Geo-Scientist ஆகிய தேர்வுகளில் எந்தெந்த தேர்வுக்கு கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆசிரியர்களால் அறிவுறுத்தப்படுகிறதோ அத்தகைய தேர்வுகளில் வேண்டுமென்றே ஆக்கபூர்வமான காரணங்கள் இன்றி விண்ணப்பிக்காமல்

அல்லது விண்ணப்பித்துவிட்டு தேர்வுக்கு செல்லாமல் இருக்கும் மாணவர்கள்.

விதி - **15.9** விதி எண் **15.1** முதல் **15.8** வரை உள்ள எந்தஒரு காரணத்திற்காகவும் மாணவர் தற்காலிகமாக குறைந்தது 5 நாட்கள் வகுப்பிலிருந்து நீக்கப்படலாம்.

விதி - **15.10** தற்காலிகமாக நீக்கப்பட்ட 5 நாட்களில் தங்களது தவறை திருத்திக்கொண்டு, எத்தனை விதிமீறல்கள் செய்யப்பட்டனவோ அவை ஒவ்வொன்றுக்கும் தலா ரூபாய் 350/- தண்டத்தொகையை(Penalty) அதற்கான விண்ணப்பத்தை பூர்த்திசெய்து செலுத்துவதின் பேரில் மீண்டும் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள்.

## அத்தியாயம் - XII விதிவிலக்குகள்

விதி - **16** விதிகள் **3.1, 3.2, 15** ஆகியவை Live class (Not Mandatory) மாணவர்களுக்குப் பொருந்தாது.

விதி - **17** விதி எண் 5 மற்றும் 7-ன் கீழ் ஏற்கனவே சலுகையை பெரும் மாணவர்கள், மற்ற எந்த ஒரு பயன்களையும் பெற இயலாது.

விதி - **18** அத்தியாயம்-III-ன் கீழான அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்திசெய்யாத மாணவர்கள், எந்தளவுக்கு விதிமீறலில் ஈடுபட்டுள்ளாரோ அந்தளவு தண்டத்தொகை செலுத்துவதன் பேரில் மட்டுமே விதி எண்-5 ன் கீழ் அடுத்த ஆறுமாதம் வகுப்பை தொடர இயலும்.

## தன்விருப்புரிமை அதிகாரம்

விதி - **19** விதி எண்-5-ன் கீழ் 6 மாதம் ஏற்கனவே இக்கல்விச்சாலையில் பயின்ற மாணவரை அடுத்த 6 மாதங்களுக்கு எந்தஒரு கல்விக்கட்டணமும் இன்றி அனுமதிப்பது மற்றும் விதி எண்-6, 7, 8, 9, 10-ன் கீழ் கல்வி உதவித்தொகை வழங்குவது AJ Chem கல்விச்சாலையின் தன்விருப்புரிமை அதிகாரத்தை (Discretionary power) சார்ந்தது ஆகும். இவை மாணவரின் கண்ணியம், ஒழுக்கம் மற்றும் அத்தியாயம்-III-ன் கீழான செயல்பாடுகளுக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது.

தங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் கீழே கொடுக்கப்பட்ட மின்னஞ்சல் மூலம் எங்களை தொடர்புகொள்ளவும்.

இந்த படைப்பை பிழையின்றி வழங்குவதற்கு சிறந்த முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், சில தவறுகள் கவனக்குறைவாக ஊடுருவியிருக்கலாம். எனவே அவற்றிற்கு நாங்கள் எந்த சட்டப் பொறுப்பையும் ஏற்கவில்லை. அவற்றை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், அடுத்த பதிப்பில் திருத்தங்கள் செய்யப்படும்.